**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 86/2022**

2026–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 03–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 03.02.2026 | | |
|---|---|---|---|
| பெயர்: | மூர்த்தி (PW–1 Chief & cross ) | தகப்பனார் பெயர்: | காத்தமுத்து |
| கிராமம்: | அகர எலத்தூர் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | தூய்மை பணியாளர் | வயது : | 50/2026 |

**முதல் விசாரணை : 03.02.2026**

நான் இவ்வழக்கின் கிறிஸ்டோபர் பொன்னன் அவர்களின் அதிகாரம் பெற்ற முகவர் ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். என்னுடைய சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். அந்த நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். வழக்கிற்கு ஆதரவாக கீழ்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. கடந்த 03.04.1978 தேதியிட்ட எனது முதல்வர் கிறிஸ்டோபர் பொன்னன் அவர்கள் பெயரில் ஏற்பட்ட சுத்த கிரய சாசனம் அசல் **வா.சா.ஆ.1** ஆகவும்

2. 23.11.1990 தேதியிட்ட எனது முதல்வர் கிறிஸ்டோபர் பொன்னன் அவர்கள் எழுதிக்கொடுத்த பெந்தக பத்திரம் அசல் **வா.சா.ஆ.2** ஆகவும்

3. 21.11.1990 தேதியிட்ட தாவா சொத்தை பொறுத்த வில்லங்க சான்று அசல் **வா.சா.ஆ.3** ஆகவும்

4. 07.03.2002 தேதியிட்ட வரவு ரசீது அசல் **வா.சா.ஆ.4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**<u>2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**(ஆரம்பித்த நேரம்–12.06)**

1. எனது முதல்வரும் வாதியுமான கிறிஸ்டோபர் பொண்ணனுக்காக இந்த வழக்கில் நான் சாட்சியமளிக்கிறேன். வாதி என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனது முதல்வர் ரூ.10,000/– கடன் வாங்கி அடைத்துவிட்டார், அதற்காக ஏற்பட்ட பெந்தக கடனை நீக்குவதற்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சட்டப்படி ஏற்பட்ட ஆவணத்தை ரத்து செய்ய அனுமதி இல்லை என்றாலும் மேலதிகாரிகள் தான் ரத்து செய்ய முடியும் என்றாலும் சரியல்ல.

2. 07.03.2002ல் ஏற்பட்ட ஆவணத்தை பொறுத்து 2ம் பிரதிவாதியிடம் எவ்வித மனுவும் கொடுக்கவில்லை என்பதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வழக்கிற்கு தேவையற்ற தரப்பினர் என்பதால் இந்த வழக்கு அதனடிப்படையில் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது.</u>**

**<u>மறு விசாரணை இல்லை.</u>**

**(முடிவு நேரம்– 12.12)**